## தென்னை பயிர்செய்கைச் சபை-2013

தென்னை பயிர்செய்கைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தென்னை பயிர்செய்கைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய கணக்குகள்

ஜீப் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 149,640 தொகை 2005 ஆம் ஆண்டின் போது முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்கூட்டுத்தாபனத்தினால் உரிய ஜீப் வண்டியின் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வழங்கப்பட்ட முற்பணத்தை மீள அறவிடாமல் முற்பணக் கணக்கில் மேலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபையின் நிதி விளைவுகள் ரூபா 71,772,762 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,207,368 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 73,980,130 தொகையான அதிகரிப்பிற்கு செஸ் மானியம் ரூபா 174 மில்லியனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டில் மாதிரி தென்னந் தோப்புக்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 71,337,032 தேறிய இலாபமாக இருந்ததுடன் அதனுடன் ஒப்பீடு செய்த போது முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 124,352,387 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இலாபத்தில் குறைவு ரூபா 53,015,355 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் நாற்றுமேடைப் பிரிவில் ரூபா 91,244,893 தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 67,863,491 ஆகும்.

(இ) மீளாய்வாண்டில் உரப் பிரிவின் செயற்பாட்டு விளைவு ரூபா 161,699 தேறிய இலபமாகஇருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 1,236,868 ஆக இருந்தது. முன்னைய ஆண்டை விட உர விற்பனை வருமானம் ரூபா 1 மில்லியனால் குறைவடைந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

(அ) 07 வெளிநபர்களினால் ரூபா 13,664,405 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் வெளி நிறுவனங்கள் மற்றும் 04 நபர்களுக்கு எதிராக ரூபா 2,807,891 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

செயற்திட்டம் மற்றும் அபிவிருத்திப் பிரிவு, மாதிரி தென்னந்தோப்பு மற்றும் நாற்றுமேடை அபிவிருத்திப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, நிருவாக மற்றும் மனித வள முகாமைத்துவ பிரிவு மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவுகளாக தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை 05 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு செயற்பாடுகளினதும் இலக்குகள் மற்றும் அடைந்து கொள்ளலின் பொழிப்பு என்பன கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) மானியக் கொடுப்பனவு**

சபையினால் மீளாய்வாண்டின் போது சில மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது மானிய நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக இலக்கு மற்றும் செயல்முன்னேற்றம் என்பன பின்வருமாறு இருந்தன.

(i) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட மானிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே நகர வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ''கப்றுகை பறபுறை'' போன்ற இரண்டு மானிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டின் இரண்டின் இறுதிக்காலாண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டிற்குமுரிய தென்னம் பிள்ளைகளை பகிர்ந்தளிக்கும் செயல்முன்னேற்றம் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதன் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 20 சதவீதம் மற்றும் 6 சதவீதமாக இருந்தது.

(ii) காணப்படுகின்ற தென்னங் காணிகளிலிருந்து அதிக உற்பத்தியைப் பெற்றுக்கொள்வதற்கு தென்னங் காணிகளை புனரமைப்பு செய்தல் நோக்கமாக இருந்ததுடன் அதற்காக மண்ணரிப்பைக் குறைத்தல், ஈரலிப்பைப் பாதுகாத்தல், இடைவெளிகளில் பயிரிடல் போன்ற விவசாய விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது தென்னங் காணியை புனரமைப்புச் செய்வதற்காக இடைவெளிகளில் பயிரிடுவதற்காக தென்னம் பிள்ளைகளை பகிர்ந்தளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு தென்னம் பிள்ளைகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் மாத்திரம் தென்னங் காணியை புனரமைப்புச் செய்தல் போதியளவானதாக இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் போது 250 மாட்டுப் பண்ணைகளுக்கு மானியம் வழங்குவதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 128 மாட்டுப் பண்ணைகளுக்கு மாத்தரமே மானியம் வழங்கப்பட்டிருந்தமையினால் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 51 சதவீதமாக இருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது தென்னங்காணிகளில் நீர்க் குழாய் முறைமையை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் 1000 ஏக்கர்களுக்காக மானியம் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 510 ஏக்கர்களுக்கு மாத்திரமே மானியம் வழங்கப்பட்டமையினால் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 51 சதவீதமாக இருந்தது.

**(ஆ) மாதிரித் தென்னந் தோப்பு**

மீளாய்வாண்டின் போது மாதிரி தென்னந் தோப்பாக 12 தோட்டங்கள் சபையினால் முகாமை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் மொத்த தேங்காய் விளைச்சல் 4.59 மில்லியன் காய்களாக இருந்தது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 38 சதவீத வீழ்ச்சியாகும். இதற்கான காரணமாக ‘‘உலர் வலயத்திற்கிடைப்பட்ட வலயத்தில் அமைந்துள்ள மாதிரித் தென்னந்தோப்புக்களில் அறுவடை குறைந்தமைக்கு பிரதான காரணம் அதிக உஷ்ண நிலை மற்றும் அதிக வறட்சியுடன் கூடிய காலநிலை’’ என தலைவர் அறிவித்திருந்தார்.

(ii) சராசரி நிலைமையின் கீழ் தென்னைப் பயிர்ச்செய்கை நிலத்தில் ஒரு ஏக்கரில் வருடாந்தம் ஆகக் குறைந்தது 4,500 – 5,000 தேங்காய்களுக்கிடையிலான அளவில் தேங்காய் விளைச்சல் பெறக்கூடியதாக இருந்த போதிலும் ஒட்டு மொத்தமாக சபைக்குரிய மாதிரி தென்னந் தோப்புகளிலிருந்து ‘‘மஹயாய’’ தென்னந் தோப்பு தவிர ஏனைய சகல மாதிரி தோட்டங்களிலும் விளைச்சல் அந்த சராசரி மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(iii) மாதிரி தென்னந் தோட்டமாக பராமரிக்கப்படுகின்ற 12 தோட்டங்களில் 04 தென்னந் தோப்புக்கள் தவிர ஏனைய தென்னந் தோட்டங்களில் ஒரு மரத்திற்கான வருடாந்த சராசரி விளைச்சல் 50 காய்களுக்குக் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iv) 08 மாதிரி தென்னந் தோப்புக்களில் விழுகின்ற தேங்காய்களின் சதவீதம் 30 தொடக்கம் 41 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(v) ஒட்டு மொத்தமாக மாதிரி தென்னந் தோப்புக்களில் மதிப்பிடப்பட்ட தேங்காய்களின் விளைச்சல் 6.57 மில்லியன் காய்களாக இருக்க வேண்டிய போதிலும் உள்ளபடியான தேங்காய் விளைச்சல் 4.59 மில்லியன் காய்களாக இருந்தன. அதன் பிரகாரம் முரண்கள் 1.97 மில்லியன் காய்கள் அதாவது 30 சதவீதமாகும். இவ்வாறு மாதிரி தென்னந் தோப்புக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தேங்காய் விளைச்சலுக்கிடையே உயர்ந்த முரண்கள் காணப்பட்டமையினால் தேங்காய் விளைச்சல் தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல் உரிய படி மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

**(இ) தோட்ட முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தோட்டங்களின் செயல்முன்னேற்றத்தை புலனாய்வு செய்வதற்காக இணையத்தள தகவல் முறைமையில் தரவுகளை உள்ளடக்கும் போது தோட்ட முகாமையாளரின் பாதுகாப்பு அடிப்படையைப் பயன்படுத்தி தோட்ட முகாமையாளர் அல்லது அவர்களின் கீழுள்ள உத்தியோகத்தரினால் உரிய தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது இணையதளத்திற்கு உட்பிரவேசிக்கும் குறிப்பைக் காட்டுகின்ற பதிவேடு பேணப்படாமையினாலும் இந்த தரவுகளை தனித்தனியாக குறிப்பிடப்பட்டு வைத்துக்கொள்ளும் திட்டமொன்று காணப்படாமையினாலும் தகவல்களின்

நம்பிக்கைத் தன்மை மற்றும் அதன் பொறுப்புக்களை கையளித்தல் தொடர்பாக பிணக்குகள் ஏற்படக் கூடியதாக இருந்தது.

(ii) மாதிரி தென்னந் தோப்புக்களின் நிலப் பகுதிகள் ஒதுக்கப்பட்டு அவ்வாறு ஒதுக்கப்பட்ட பகுதி ஒவ்வொரு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் நாளாந்தம் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் வெளிக்களப் புத்தகத்தில் குறிப்பிடப்பட வேண்டியிருந்ததுடன் அது தோட்ட முகாமையாளரின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் வெளிக்கள உத்தியோகத்தரினால் நாளாந்தம் உரிய வகையில் வெளிக்களப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டிராததுடன் அது தோட்ட முகாமையாளரின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தென்னைப் பயிர்ச்செய்கைக்கான காணியை பொருத்தமானதாக வகைப்படுத்தல்**

சபைக்குச் சொந்தமான மாதிரித் தென்னைப் பயிர்ச்செய்கைக்கான காணி பொருத்தமானதாக வகைப்படுத்தப்படாதிருந்ததுடன் அதனால் ஆகக் கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய உபாயங்களை சரியாக இனங்காணுதல் பிரச்சினைக்குரியதாகவும், தேங்காய் விளைச்சலை சரியாக மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(உ) மாதிரி தென்னந் தோப்புக்களில் மயிட்டா பாதிப்பினைக் கட்டுப்படுத்தல்**

தென்னை மயிட்டாவைக் கட்டுப்படுத்தும் உள்ளக சிபார்சுகளை தவிர்க்கும் போது நிரந்தர உயிரியல் விஞ்ஞான முறையாக எதிர்ப்பு மயிட்டா தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் சபை 07 எதிர்ப்பு மயிட்டா நிலையங்களைப் பேணியிருந்தது. எவ்வாறாயினும் சபை பேணுகின்ற 12 மாதிரி தென்னந் தோப்புக்களில் கலட்டி/குறுவல்/சிறிய காய் அளவில் உயர்வடைவதற்கு மயிட்டா இழப்பு தவிர்க்க முடியாத காரணமாக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

### 4.2.1 நிதியத்தின் முதலீடு

சபையினால் ரூபா 20,000,000 தொகை 2011 ஆம் ஆண்டின் போதும் ரூபா 24,000,000 தொகை 2012 ஆம் ஆண்டின் போதும் ஏழுநாள் வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 20,000,000 தொகை மீளாய்வாண்டின் போது மீளப் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு ரூபா 44 மில்லியன் குறுங்கால வைப்புக்களில் 02 வருடங்களுக்குக் கிட்டிய காலம் முதலீடு செய்தமையினால் நீண்டகால முதலீட்டிலிருந்து பெறக்கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை சபை இழந்திருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

திருகோணமலை மற்றும் பாசிக்குடா உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்த நிறுவனத்தினால் பெறுமதிசேர் வரியுடன் பட்டியல் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதும் சபை அந்த நிறுவனத்திற்கு ரூபா 905,031 தொகையான பெறுமதிசேர் வரியையும் உள்ளடக்கி கொடுப்பனவு செய்திருந்தது.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 925 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 580 ஆகும். செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக உரியவாறு அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள பதவிகள்

முறையே 10 மற்றும் 283 உம், ஆரம்ப நிலையில் 52 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) நாற்றுமேடை முகாமைத்துவம்
(ஈ) தோட்ட முகாமைத்துவம்